அஜயன் பாலா

தியான யாத்திரை 14

*வண்டி ஓடச் சக்கரங்கள் இரண்டு மட்டும் வேண்டும்;*

*அந்த இரண்டில் ஒன்று சிறியதென்றால் எந்த வண்டி ஓடும் ?*

- கண்ணதாசன் எழுதிய இந்த வரிகள் கொஞ்சம் உற்றுப் பார்த்தால் ஆன்மிகத்துக்கும் அடிப்படை.



# எனர்ஜி ஸ்டேஷனும் குருவும்!

வண்டி என்பது ஆரோக்கிய வாழ்க்கை. உடம்பும் மனமும் இரண்டு சக்கரங்கள். இந்தச் சக்கரங்களில் ஒன்று சரியில்லாவிட்டாலும் பிரச்னைதான். மனம் சோர்வானால் தொப்பை தள்ளும், முகத்தில் சுருக்கம் விழும், வயோதிகம் சட்டென வரும்.

உடல் சோர்வானால் மனம் அசதியுறும். சோம்பலில் விழும் உயிரணுக்கள் இயக்கம் குறையும். வாழ்க்கை யூ டர்ன் அடிக்கும்.

இப்படியான உடம்பு, மனசு ஆகிய சக்கரங்களையும் சுறுசுறுப்பாகச் சுழல வைக்க, சாட்டையைச் சுழற்றி வண்டியை நெறிப்படுத்த நமக்குள் ஒரு வண்டிக்காரன் இருக்கிறான். ஆத்மா, மனமும் உடலும் சங்கமிக்கும் ஒருபுள்ளியில் இருக்கும். அவனை உசுப்பி விட்டால் போதும் வண்டி ஜோராக ஓடும்.

சிலர் தியானத்தின் மூலமாகவும் சிலர் யோகத்தின் மூலமாகவும் அந்தப் புள்ளியை அடைகின்றனர். அல்லது அதனுள் கரைகின்றனர். அல்லது அத்தனையும் கடந்து வேறொன்றாக உணர்கின்றனர்.

இந்த இரண்டும் எல்லோருக்கும் தெரியாதல்லவா? அவர்களுக்கு அந்தப் புள்ளியை அடையாளம் செய்யும் விதமாகத்தான் சிவ வழிபாட்டில் கோயில்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

உலகிலேயே இப்படியான அறிவியல் தர்க்க ஒழுங்குடன் கூடிய ஆன்மிகம் சைவ மதத்தில்தான் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்தத் தர்க்க ஒழுங்குக்கு பெயர்தான் ஆகமவிதிகள்.

சைவ ஆகம விதிகளின்படி கோயில்கள் என்பன மனிதன் தமக்குள் இருக்கும் இறைவனைக் கண்டுணர்ந்து உள்ளத்தில் ஆற்றலைப் பெருக்க உதவும் எனர்ஜி ஸ்டேஷன்கள்.

வாயில் கோபுரத்திலிருந்து கோயிலைப் பார்க்கும்போது நிற்கும் இடத்தைப் பாதமாகக் கருதி, படுத்த வாக்கில் கிடக்கும் மனித உருவமாகக் கருவறையைப் பாருங்கள்; நினைத்து கொள்ளுங்கள்.

பலிபீடத்தை மூலாதாரமாகவும் கொடிக் கம்பத்தை நாபியாகவும் கொண்டு பார்த்தால் கருவறை முகமாகவும் குறிப்பாக மைய உருவச் சிலையைப் புருவ மையத்தின் சுழிமுனையாகவும் அடையாளம் காணமுடியும்.

நாம் கருவறை நோக்கிக் கைகூப்பி வணங்குவதற்கு முன் திரைச்சீலையால் மூடப்பட்டிருக்க, இயல்பாக நமது முழுக் கவனமும் அங்கு குவிக்கப்பட்டு நமது புருவமுனையை நாமே தரிசிக்கக் காத்திருக்கிறோம்.

ஒரு கட்டத்தில் தீபத்தின் துணையோடு நாம் பார்ப்பது கடவுளின் உருவச்சிலை அல்ல; நமது புருவத்தின் மைய புள்ளியையே.

அப்போது நமக்குள் மனமும் உடலும் ஒன்றிணைந்த புள்ளியை மனத்துள் உணர முடியும்.

இந்தப் புள்ளியில் ஆற்றல் பெருகத்தான் கோயிலில் தீபம் காண்பிக்கப்படும்போது நாம் கவனம் அங்கு ஒருங்கே குவிய அப்போது பெருத்த ஓசைகள் எழுப்பப்படுகின்றன. அந்த ஓசை மனத்தில் பெருவெளியை உண்டாக்கிப் புலனுறுப்புகளை விழிக்கச் செய்து முழுக் கவனமும் திரைச்சீலைக்கு அப்பாலிருக்கும் ஒரு புள்ளியை நோக்கி க்ளைமாக்ஸ் காட்சிக்கு நம்மை உந்தித்தள்ள இறுதியில் அதுவரை தயார் படுத்தப்பட்ட நோக்கம் நிறைவேறும் வகையில் திரைச்சீலை விலகி, தீபத்தின் போது அப்புள்ளி கண்டடைந்து அதன்வழி உடல் முழுக்க சக்தியாக நிறைந்து உடலை சமன்படுத்துகிறது. இறுதியில் நம் மனம் மீண்டும் சகஜ நிலைக்குத் திரும்ப இனிப்பு அல்லது பிரசாதம் வழங்கப்படுகிறது.

மனிதனுக்கான ஆன்மிகத் தேவையும் பூர்த்தி செய்யப்படுகிறது.

பலரும் கோயிலுக்குப் போனால்



மனத்தில் சாந்தி நிலவுகிறது எனக் கூறுவதற்கான காரணமும் இதன் பொருட்டுதான்.

இப்போது மீண்டும் இமயமலையின் பத்ரிநாத் அடிவாரத்துக்குத் திரும்புவோம். அதிகாலையில் பொன்னிறமாகும் பனிச் சிகரத்தைப் பார்த்த அனுபவம் மனத்தில் புகைப்படமாய் உறைந்து கிடக்க, அனைவரும் விடியற்காலையில் மூட்டை முடிச்சைக் கட்டிக்கொண்டு அடுத்த இலக்கான கங்கோத்ரிக்குத் தயாரானோம்.

வழக்கம் போல நாங்கள் தங்கியிருந்த விடுதி



வாசலுக்கு வாகனங்கள் வந்து நிற்க, அனைவரும் அவரவர் பேருந்துகளில் துரிதமாகச் சுமைகளை ஏற்றத் தொடங்கினர்.

இந்தச் சுமைகளை, பேருந்தில் ஏற்றுவது மேலோட்டமாகப் பார்த்தால் ஒரு சாதாரணமான விஷயம்தான். ஆனால் அதற்குள்ளும் நாம் கற்றுக்கொள்ள பல விஷயங்கள் ஒளிந்து கிடப்பதையும் ஆன்மிகத்தின் சிறுவாசல் அதனுள் மறைந்து கிடப்பதையும் அவ்வப்போது தரிசிப்பேன்.

உண்மையில் அக்காட்சி பார்ப்பதற்கு ஏதோ போர்க்களத்தில் இருப்பது போல, படு சுவாரசியமாகவும் பரபரப்பாகவும் இருக்கும். பயணிகள் தங்கள் லக்கேஜுகளைக் கீழே வரிசையாகக் கொண்டு வைக்க, அதனை ஒருவர் எடுத்து ஏணியில் தயாராகக் காத்திருப்பவரின் தலையில் வைக்க, அவர் அதனைச் சுமந்து மேலே எடுத்துச் செல்ல, அங்கு காத்திருப்பவர்கள் அதனை வாங்கிக் கூரையில் ஒழுங்காக அடுக்கி முடிவில் தார்பாலின் போர்த்தி இறுகக் கட்டுவார்கள். ஒவ்வொரு பேருந்திலும் ஒவ்வொரு குழு இதற்கென்றே ஆரம்பம் முதலே செயல்படும். அதில் வண்டியோட்டியும் க்ளீனரும் சில உதவி செய்வார்கள். இப்படியாக நான்கைந்து பேர் ஒன்று கூடி பிறருக்காக இந்தப் பணியை அவர்கள் சிரத்தையுடன் அக்கறையுடன் செய்யும் சமயங்களில் அவர்களுக்குள் ஏற்படும் ஒத்திசைவும் உற்சாகமும் தொலைவிலிருந்து பார்ப்பதற்குத் தன்னம்பிக்கையை ஊட்டுவதாக இருக்கும்.

ஒரு பக்கம் இப்படிப் பரபரப்பாக சுமைகள் ஏற்றப்பட்டுக்கொண்டிருக்க, இன்னொரு பக்கம் காலை உணவு பரிமாறலும் நடந்துகொண்டிருந்தது. இதமான வெயிலும் உடல் சில்லிடும் இதமான குளிரும் நிறைந்த சூழல் ரம்மியமாக இருக்க, பலரும் உற்சாகத்தோடு பத்ரிநாத்திலிருந்து விடைபெறும் கடைசி நொடிகளில் கரைந்து கொண்டிருந்தனர்.

ஒவ்வொருமுறை புதிய உடைகளுக்கு மாறியபின்னரும் கையில் கேமரா வைத்திருப்பவர்கள் தங்களுக்குப் பிடித்தமானவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் வழக்கமான வைபவமும் நடந்து கொண்டிருந்தது.

முழுவதுமாக சுமைகள் ஏற்றியபின் அருகிலிருந்த சிறிய அறைக்கு அனைவரும் அழைக்கப்பட்டனர். அங்கு நானும் சென்றபோது வழக்கமாக நடைபெறும் குருபூஜை சடங்கை எங்களுடன் வந்த ஸ்வாமிகள் மற்றும் மா என அழைக்கப்படும் ஈஷாவின் பிரம்மச்சாரிகள் நிகழ்த்திக் கொண்டிருந்தனர்.

குருபூஜை என்பது தங்களது ஆன்மிக குருவுக்கு சீடர்கள் நன்றி தெரிவிக்கும் நிகழ்வு. இந்தியாவின் பாரம்பரிய மரபான இவ்வழக்கம் பண்பாட்டு வகையிலும் மிகவும் போற்றத்தக்க ஒரு சடங்கு.

பொதுவாக நன்றியுணர்வு மனிதனைப் பல நிலைகளில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய அற்புத மான உணர்வு.

மனித மனம் என்னதான் பக்குவப் பட்ட நிலையில் சென்றாலும் பல சமயங்களில் அது மகிழ்ச்சி கொள்ளும் தருணங்களில் தன் நிலை குறித்து மிகவும் கர்வம் கொள்ளும். தன்னுணர்வு அதிகம் பெற்ற அத்தருணங்களில் அது தன்னிச்சையாக முடிவெடுத்துப் பல தவறான வழிகளில் திசை மாறிப்போக, மோசமான எதிர்காலத்தைச் சந்தித்துக்கொள்கிறது.

**"தாம் அடைந்த வெற்றிக்கும் பலனுக்கும் காரணம் குருதான் என்ற நினைப்பு வேண்டும்."**

பொது வாழ்வில் உயரத்துக்குச் செல்லும் பலரும் வெகு சுலபமாக சரிவைச் சந்திப்பதற்கும் இதுதான் காரணம்.

மனிதன் தாம் பெறும் ஒவ்வொரு வெற்றியை, தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவும் மேலும் பல நிலைகளை அடையவும் அவனுக்கு மிக முக்கியமான தேவை அவனுக்குள் நடைபெற வேண்டிய சுயமதிப்பு.

தாம் அடைந்த வெற்றிக்கும் பலனுக்கும் தமக்குக் காரணமாக இருந்த குருவும் காரணம் என்ற நினைப்பு அவனை மேலும் தொடர்ந்து வெற்றி பெறச் செய்கிறது. ஆன்மிக வாழ்க்கையிலும் இத்தகைய குரு பக்தி அவர்களைத் தொடர்ந்து



முன்னெடுத்து சரியான பாதைக்கு அழைத்துச் செல்கிறது.

'குரு பார்த்தால் கோடி புண்ணியம் என்பார்கள்'- அதற்கு ஜோதிட விளக்கம் எப்படியோ; ஆனால் அதன் உண்மையான அர்த்தம் இதுவாகத்தான் இருக்கமுடியும்.

இத்தருணத்தில் நாமும் மறந்து போன நம் குருநாதர்களை நினைத்து வணங்கி நெஞ்சுருகித் தொழும் தருணமாக எடுத்துக் கொண்டால் வாழ்வின் இன்னொரு புதிய வாசல் திறக்கக் கூடும்.

**(தொடரும்)**